**செய்தி வெளியீடு எண்:293** **நாள்:08.06.2009**

பத்திரிக்கைச் செய்தி

புதிய குடும்ப அட்டைகள் பெறுதல்,மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்டம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புதுறை , சென்னையில் **16** மண்டல பகுதி மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் கண்ட இடங்களில் ஜுன் **2009** மாதத்திற்கான மக்கள் குறைதீர் கூட்டம் **13.06.2009 (**இரண்டாவது சனிக்கிழமை**)** அன்று காலை **10.00**மணிக்கு நடத்தப்பட உள்ளது,. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல் படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, கூட்டுறவுதுறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்துகொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி வாழும் பொது மக்கள் புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தெரிவிக்கலாம். குறைதீர் கூட்டத்தில் தெரிவிக்கப்படும் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள **16** மண்டல பகுதி வாழ் பொது மக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

இணைப்பு – 1

| வ.எண் | அலுவலகம் | கூட்டம் நடக்கவிருக்கும் இடம் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | சி.எஸ்.ஐ. ராஜகோபால மிண்ட் நடுநிலைப்பள்ளி, எண் 9/5 , கொண்டலைய்யர் தெரு, கொண்டிதோப்பு, சென்னை / 79 |
| 2 | இராயபுரம் | சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி எண் 70, சிமெண்டரி ரோடு, சென்னை 21 |
| 3 | பெரம்பூர் | சென்னை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி எண் 26, சேமையய்யா ராஜா தெரு, அகரம தெற்கு, சென்னை82 |
| 4 | அண்ணாநகர் | சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, சின்னபாபு தெரு, ஓட்டேரி, சென்னை 12 |
| 5 | அம்பத்தூர் | அம்பத்தூர் நகராட்சி நடுநிலைப்பள்ளி எண் 1, பிள்ளையார் கோயில் தெரு, பாடிகுப்பம், சென்னை 107 |
| 6 | வில்லிவாக்கம் | ஶ்ரீ பாலகுருகுலம் துவக்கப்பள்ளி, எண் 4, திருமங்கலம் ரோடு, சென்னை 49 (நாதமுனி தியேட்டர் அருகில்) |
| 7 | திருவொற்றியூர் | பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளி சின்ன சேக்காடு, மணலி, சென்னை 68 |
| 8 | ஆவடி | வெங்கடேஸ்வரா மெட்ரிக் ஸ்கூல் எண் 7 பாரதி நகர் மெயின் ரோடு, திருமுல்லைவாயல், சென்னை 62 |
| 9 | தி.நகர் | மாநகராட்சி தாமோதரா தொடக்கப்பள்ளி, எண் 18, ஈஸ்வரன் கோயில் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை 33 |
| 10 | மயிலாப்பூர் | மாநகராட்சி அலுவலகம் (மணட்லம்10), மாநகராட்சி அலுவலக கட்டிடத்தின் பின்புறம், டாக்டர் முத்துலட்சுமி சாலை, அடையார், சென்னை 20 |
| 11 | பரங்கிமலை | லக்கி கல்யாண மண்டபம், 140, கருணீகர் தெரு, ஆதம்பாக்கம், சென்னை 88 ( பரங்கிமலை ரயில் நிலையம் அருகில்) |
| 12 | தாம்பரம் | செம்பாக்கம் சமுதாய நலக்கூடம், வேளச்சேரி மெயின் ரோடு, செம்பாக்கம் |
| 13 | சைதாப்பேட்டை | அன்னபூரணி அம்மாள் நடுநிலைப்பள்ளி,எண் 34./99,பழைய மாம்பலம் ரோடு, சென்னை 15 |
| 14 | ஆயிரம் விளக்கு | புனித அந்தோணியார் சமூக கூடம்,திருவேங்கடம் தெரு, எழும்பூர், சென்னை 8 ( ஆதித்தனார் சிலை அருகில்) |
| 15 | சேப்பாக்கம் | சென்னை மாநகராட்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளி, எண் 7, இருசப்பகிராமணி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 5 |

| | | |
|---|---|---|
| 16 | சோழிங்கநல்லூர் | மடிப்பாக்கம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வாளகம், குளக்கரை தெரு, மடிப்பாக்கம், சென்னை 91 பஸ்நிலையம் / மின்வாரிய அலுவலகம் அருகில், |